Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம். சார்வரி பங்குனி 8-ஆம் நாள் ஷவ்வால் 3 (21-3-61) செவ்வாய்க்கிழமை இதழ் 33

Jegajothi
TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

# மன்னார் கச்சேரி 'முற்றுகை'

## பெண்கள்-வர்த்தகர்-பிரமுகர்கள் சத்தியாக்கிரகம்

மன்னார், திங்கள்

தமிழரசுக்கட்சி தமிழ்ப்பகுதிகளில் ஆரம்பித்துள்ள நேரடி நடவடிக்கையின் இரண்டாவது அம்சமான மறியல் இயக்கம் இன்று முதல் தடவையாக மன்னாரில் ஆரம்பமானது.

அதிகாலை ஐந்து மணிக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட தொண்டர்கள் பக்திப் பாடல்கள் பாடிக்கொண்டு ஊர்வலமாக் கச்சேரிக்கு வந்துசேர்ந்தனர். கச்சேரியை முற்றுகையிட்டது போல் சூழ்ந்துகொண்ட தொண்டர்கள் வாசல்களில் அமைதியாக உட்கார்ந்து மறியல் செய்தனர்.

### கடைகள் மூடப்பட்டன

மன்னாரிலுள்ள வர்த்தகர்களும். கடைகளை மூடி ஹர்த்தால் அனுஷ்டித்ததுடன் ஊர்வலமாகக் கச்சேரிக்கு வந்து மறியலில் கலந்துகொண்டனர்.

முதல்நாள் மறியல் இயக்கத்திலேயே பெண் தொண்டர்களும் மன்னாரில் இன்று கலந்துகொண்டனர். காலையில் ஆண் தொண்டர்கள் ஆரம்பித்த மறியல் இயக்கத்தில் பிற்பகலில் பெண்கள் வந்து கலந்துகொண்டனர்.

மன்னார் எம்.பி. திரு வி. ஏ. அழகக்கோன் தலைமையில் நடைபெற்ற இன்றைய மறியல் இயக்கத்தில் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், டாக்டர் பரமநாயகம், திரு. எஸ். சிவசுப்பிரமணியம், சேர். கந்தையா வைத்தியநாதன் ஆகியோரும் மற்றும் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த திரு. ஆர். எம். வேலுசாமியும் மற்றும் பலரும் இன்றைய மறியல் இயக்கத்தில் கலந்துகொண்டனர்.

தண்ணீர், சுகாதார வசதிகளை மன்னார் பட்டினசபை திருப்திகரமாக ஒழுங்குசெய்திருந்தது.

## வியாழக்கிழமை பிரதமர் வருகிறார்

கொழும்பு, திங்கள்

காமன் வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ள லண்டன் சென்றிருந்த பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா வியாழக்கிழமை பிற்பகல் 2.55 மணிக்கு கொழும்பு வந்து சேருவார். இரத்மலானை விமான நிலையத்தில் பிரதமருக்கு மகத்தான வரவேற்பளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

---

புதுடில்லி, மார்ச் 20

இந்தியாவுக்கு விஜயம் செய்யும்படி ராஷ்டிரபதி இராஜேந்திரபிரசாத் விடுத்த அழைப்பை மலேயா மன்னர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

## பங்கீட்டு அரிசி
# கொழும்பிலிருந்து புதிய உத்தரவு வரவில்லையாம்

யாழ்ப்பாணர், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் பங்கீட்டரிசி விநியோகம் செய்வதற்கு இந்த வாரமும் எவ்வித ஒழுங்கும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. கச்சேரிக்குச் சென்று பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுக்களைப் பெற உத்தரவாதம் பெற்ற வியாபாரிகளும், கூட்டுறவுச் சங்கக் கடைகளும், கூட்டுறவுச் சமாஜங்களும் மறுத்துவிட்டனர். பங்கீட்டரிசி விநியோகம் சம்பந்தமாக புதிய உத்தரவு எதுவும் கிடைத்துள்ளதா? என்று அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நேற்று மாலை விசாரித்த பொழுது "இல்லை" என்று பதில் கிடைத்தது.

பங்கீட்டரிசி பெறுவதற்கான அனுமதிச் சீட்டுக்களைக் பெற்றுக்கொள்ள யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உத்தரவாதம் பெற்ற வியாபாரி எவரும் நேற்றுக் கச்சேரிக்குச் செல்லவில்லை.

பங்கீட்டரிசி பெறுவதற்கான அனுமதிச் சீட்டுகளைக் கச்சேரிக்கு வந்து பெற்றுக் கொள்ளும்படி யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதினன்கு கூட்டுறவுச் சங்க சமாஜங்களை யாழ்ப்பாண மாவட்ட தற்காலிக அரசாங்க அதிபர் திரு. நிலங்கா விஜயரத்தின கேட்டிருந்தார்.

தமது வேண்டுகோளை கூட்டுறவுச் சமாஜம் எதுவும் ஏற்றுக்கொள்ளாததால் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உத்தரவாதம் பெற்ற வியாபாரிகளையும் கூட்டுறவுச் சங்கக் கடை மனேஜர்களையும் நேரடியாகக் கச்சேரிக்கு வந்து பங்கீட்டரிசிக்கான அனுமதிச்

(6-ம் பக்கம் பார்க்க)

# சாதாரண நெல்லுக்கு தடை விதிக்கப்படவில்லை

கொழும்பு, திங்கள்

உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் அரசாங்கம் கொள்முதல் செய்த நெல் (வர்ணம் பூசப்பட்டது) மட்டுமே ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்துக்குக் கொண்டுசெல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதென்றும் சாதாரண நெல் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்படவில்லையென்றும் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனையிறவுக்கடவையில் உணவுப்பொருள்கள் கொண்டு செல்வதை இப்பொழுது விசேஷமாகத் தடை செய்யவில்லையென்றும் சில பொருள்களுக்கு முன்பு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுதான் இப்பொழுதும் தொடர்ந்திருக்கிறதென்றும் அந்த அதிகாரி கூறினர்.

உணவுப் பொருள்கள் கொண்டு செல்வதைத் தடை செய்வதற்காகவே ஆனையிறவுக் கடவையில் இராணுவ வீரர்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதாகக் கூறுவது தவறென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

---

## நிதிமந்திரி ரஷ்யா செல்கிறார்

நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று லண்டனிலிருந்து மாஸ்கோவுக்குப் பயணமாகிறார்.

மாஸ்கோவில் நிதிமந்திரி இலங்கையின் தொழிற் திட்டங்களுக்கு நிதிஉதவிகோரிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

# சத்தியாக்கிரகிகள் செய்த இரு முறை பிரார்த்தனை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பமாகி நேற்றுடன் ஒருமாதம் முடிவடைந்துவிட்டது. சென்ற சனி, ஞாயிற்றுக்கிழமையில் கச்சேரிமுன் பெருந்தொகையான மக்கள் திரண்டு நின்றதற்கு எதிர்மாருக நேற்று மக்கள் கூட்டம் குறைவாகக் காணப்பட்டது. திங்கட்கிழமை அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்படக் கூடும் என்று நகரில் பலத்த வதந்தி உலவியபோதிலும் பெண் தொண்டர்கள் கச்சேரி வாசல்களில் அமைதியாக உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் இன எழுச்சிப் பாடல்களைச் சொல்லிக் கொடுக்க வயதுமுதிர்ந்தமாதர்களும் மற்றையோரும் அமைதியாகப் பாடிக்கொண்டிருந்தனர். அங்கு காவல்புரிந்து கொண்டிருந்த சிங்களப்பொலிஸார்கூட இசையில் மனதைப் பறிகொடுத்துத் தங்களையறியாமலே தலையை அசைத்துத் தாளம்போட்டனர்.

சத்தியாக்கிரகிகளைப் பார்த்துக்கொண்டு காரில் சென்ற ஒரு பொலிஸ் அதிகாரி பெண் தொண்டர்களைத் தாண்டிச் சென்றபொழுது தமது தொப்பியைக் கழற்றி மரியாதை செய்துகொண்டு சென்றார்.

கச்சேரியின் பிரதான வாசல் கதவில் சிறைக்கதவின் பின்னல் தமிழ்த்தாய் தலைவிரிகோலமாக நிற்பது போன்ற சித்திரம் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. பருத்தித்துறை வர்த்தகர் தமிழியக்கத்தினர் இதை ஊர்வலமாகக் கொண்டுவந்திருந்தனர்.

தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் விடுத்துள்ள வேண்டுகோளுக்கிணங்க நேற்று நண்பகல் 12 மணிக்கும் மாலை 6 மணிக்கும் மக்கள் நின்று இரண்டு நிமிஷம் பிரார்த்தனை

(6ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் துண்டுப் பிரசுரம்
## இரு அமைச்சுகளின் அறிக்கை

கொழும்பு, திங்கள்

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சும், கலாச்சாரவிவகார உள்நாட்டு அமைச்சும், இன்று கூட்டாக வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:-

மன்னார் கச்சேரியில் இன்று காலை முதல் மறியல் நடைபெற்றது. வாசஸ்தல வாசல்வழியாக கச்சேரி உத்தியோகத்தர்கள் உள்ளே செல்லாதவாறு வாசஸ்தல வாசலுக்கு அருகில் கணிசமான அளவு ஆட்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். கச்சேரி உத்தியோகத்தர்கள் வேலைக்கு வந்திருந்தனர். மன்னார் நகரிலுள்ள இதர அரசாங்க காரியாலயங்களில் இந்த உத்தியோகத்தர்கள் வேலை செய்வதற்கு அரசாங்க அதிபர் ஒழுங்கு செய்திருந்தார்.

உள்ளே வரமுடியாததால் தங்கள் பிரதிநிதிகள் வாசஸ்தலத்துக்கு வரமுடியாதிருப்பதாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அநேகமானகூட்டுறவுச் சமாஜங்கள் அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளன. வாசஸ்தலத்துக்கு வரமுடியும் என்று

(6ம் பக்கம் பார்க்க)

# "இலட்சியத்தை அடையும்வரை போராட்டம் நடைபெறும்"
## எஸ். ஜே. வி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், செவ்

"சத்தியாக்கிரக இயக்கத்தைக் கைவிடும் நோக்கம் எதுவும் கிடையாது" என்று தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அறிவித்துள்ளார்.

'அவசரகால நிலைமை பிரகடனம் . . . . . . தியாக்கிரகம் கைவிடப்படும்' என்று ஆங்கிலப் பத்திரிகையொன்றில் வெளிவந்த செய்தியை மறுத்த பொழுதே திரு. செல்வநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தமிழ்ப்பேசும் மக்களின்

(6-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

இறைவனே! உமது பாதங்களின் அடியில் உம்முடைய அடியார்கள் மன அமைதியுடன் வாழ்ந்துவருகிறார்கள். எங்களைக் காப்பாற்ற உம்முடைய புஜ பலம் போதும். எங்களை அழிக்க எவராலும் இயலாது.

— ஐசக் வுட்ஸ்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 8 உ (21-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## பத்திரிகை மசோதா

இலங்கையிலுள்ள பத்திரிகை நிர்வாகத்தை ஒருவித அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத்தக்க மசோதா ஒன்றை விரைவில் பார்லிமெண்ட் சபைக்குக் கொண்டுவருவதாக அறிவித்துள்ளனர். இது இலங்கையில் ஜனநாயகத்தைப் பலப்படுத்த உதவமாட்டாது.

இந்த யோசனை புதிதல்லதான். எட்டு மாதங்களுக்கு முன்பே இவ்வித உத்தேசத்தை அரசாங்கம் சிம்மாசனப் பிரசங்கமூலம் வெளியிட்டிருந்தது. உடன் இதற்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பலத்த கண்டனங்கள் கிளம்பின. இக்காரணத்தாலோ, அல்லது ஒரு பத்திரிகை ஸ்தாபனத்தின் எதிர்ப்பு மாறியதாலோ, அரசாங்கமும் இதுவரை மௌனம் சாதித்தது. இப்பொழுது திடீரென மீண்டும் அந்தப் பூச்சாண்டியைக் காட்டவேண்டிய அவசரம் என்னவென்று விளங்கவில்லை. முக்கியமான வேறு பல விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்க, அதைவிட்டு, தீவிர கருத்துவேற்றுமைக்கான இம்மசோதாவைக் கொண்டுவர நியாயமில்லை.

ஏற்கெனவே இங்கு ஜனநாயகம் சீர்குலைந்திருக்கிறது. சிறுபான்மை மக்களின் மொழி, வாக்குரிமை, பிரஜா உரிமை, சமயம் முதலிய அடிப்படை உரிமைகளுக்கும் பாதுகாப்பில்லை. அவற்றைப் பறிக்கக் கூடிய சட்டதிட்டங்கள், பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. பத்திரிகைகள்தான் ஜனநாயக ஆட்சியில், மக்களின் உரிமைகளுக்காகப் போராடி, தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டியவை. பத்திரிகைகள் சுதந்தரமாக இயங்கினுல்தான், இக் கடமையை அவை சரிவரச் செய்ய முடியும். பத்திரிகை நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தினுல், சிறுபான்மை சமூகத்தினரின் உரிமைகளைத் துணிச்சலுடன் எடுத்துக் கூறி, அவற்றைப் பாதுகாக்கக்கூடிய வாய்ப்பு பெரிதும் குறைந்துவிடக் கூடும்.

இலங்கையிலே தேசியப் பத்திரிகைகள் என்று கூறப்படுபவை, தங்கள் ஜனநாயகக் கடமையை இதுவரை சரிவர விருப்பு வெறுப்பின்றிச் செய்திருந்தால், இன்று நாட்டின் அரசியல் நிலை இவ்வளவு மோசமாகியிராது. சிறுபான்மை மக்களின் நிலையும் இவ்வளவு நிர்க்கதியாகியிருக்க முடியாது. பத்திரிகைகள் தங்கள் ஜனநாயகக் கடமையைச் சரிவரச் செய்யத் தவறியதால் இன்று, பத்திரிகைகளுக்கே ஆபத்து வந்துள்ளது.

புதிய மசோதா எவ்விதமிருக்குமென்ற விவரங்கள் தெரியவில்லை. இது எப்படியிருப்பினும், பத்திரிகைகள் எல்லாம் சேர்ந்து இந்தியாவிலுள்ளதுபோல் பத்திரிகையாளர் சபையை அமைத்து பத்திரிகை நெறியை வகுத்துக் கொள்வதுடன் ஜனநாயகத்தைக் காக்கத்தக்க திட்டங்களை தங்களுக்குள் அமைத்துக்கொள்ள வேண்டும். பத்திரிகைச் சுதந்திரத்தின் எதிர்காலத்தில் அரசாங்கம் தலையிடாமல் தடுக்க இது பெரிதும் பயன்படும்.

இம் மசோதா, பழி வாங்குவதற்காகவோ, பயமுறுத்துவதற்காகவோ தான் கொண்டுவரப்படுவதாக சில வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது காரணம் எதுவாயினும் சரி, இந்தியாவில்கூட இவ்வித கட்டுப்பாடு பத்திரிகைகளுக்கு இல்லை. இலங்கைப் பத்திரிகையாளர் சேர்ந்து இதை எடுத்துக்கூறி, தாங்களும் கட்டுப்பாடாக, ஜனநாயக தர்மத்தைப் பாதுகாக்க தைரியத்துடன் போராடுவதாயின் அரசாங்கமும், இந்த யோசனையை மாற்றிக்கொள்ளக் கூடும்.

# "நிலைமையை மோசமாக்க அரசாங்கமும் தமிழரசுக்கட்சியும் அனுமதிக்கக் கூடாது"

"இலங்கை எங்கே செல்லுகிறது" என்ற தலைப்புடன சென்னை "ஹிந்து" பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கையில் நெருக்கடி உச்ச நிலைக்கு வருவதுபோல் தோன்றுகிறது. அரசாங்க தற்காலிகத் தலைவர், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவசரகாலச் சட்டம் பிறப்பித்து சத்தியாக்கிரகத்தைச் சமாளிக்கலாமெனக் குறிப்பிட்டுள்ளார். தமிழரசுக் கட்சியோ, சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பது பற்றி யோசனை செய்து வருகிறது. பிரதம மந்திரி காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டுக்காக லண்டன் சென்றிருக்கிறார். இலங்கையில் துரதிருஷ்டவசமாக அதிகரித்துள்ள நெருக்கடியை மேலும் அதிகரிப்பதற்கு இது சமயமன்று.

சமஷ்டிக் கட்சியின் நிலை பலமானது. அது இதுவரை அமைதியான முறையில் சத்தியாக்கிரகத்தை நடத்தி வந்துள்ளதின் மூலம் இலங்கையிலும் வெளியிலும் பல்லாயிரக் கணக்கானவர்களின் அனுதாபத்தைப் பெற்றுள்ளது. கட்சி பேதங்கள் மறைந்து தமிழரெல்லாரும், முஸ்லிம்களும் சத்தியாக்கிரகத்தில் சேர்ந்து, இராணுவம், பொலிஸ் பலாத்காரத்தைக் கண்டித்துள்ளனர்.

அரசாங்கம் என்ன செய்வதென்று தெரியாமல், உணவுப் பங்கீட்டில் கை வைத்தது. தமிழ்ப் பகுதிகளுக்குப் பங்கீட்டரிசி அளிக்காததால், பலத்த புயல் போல் ஆட்சேபங்கள் கிளம்பின. பின்னர் வழக்கம் போல் உணவு கொடுக்க வேண்டியதாயிற்று.

அரசாங்கம் தன் மதிப்பைக் காத்துக் கொள்வதுடன், தமிழ் மாகாணங்களில் நிர்வாகமே ஸ்தம்பித்துள்ளதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதே. ஆனல் இந்தச் சங்கடங்களுக்கெல்லாம் பரிகாரம், தமிழருக்கு விரோதமாகச் சிங்கள தீவிரவாதிகளை ஏவி விடுவதன்று. மோதல்கள் ஏற்பட்டதும் நெருக்கடி ஏற்பட்டதாகக் கூறி அவசரகாலப் பிரகடனம் செய்வதுமன்று. ஆனல் மேலான அரசியல் ஞானம் காட்டி, தமிழரை வசப்படுத்துவதே சரியான வழி.

திரு. தொண்டடானும் திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவும், வடமாகாணத்துக்கு நேரில் சென்று, தமிழர் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் தங்கள் மொழி, கலாசாரங்களை எப்படியும் பாதுகாக்க உறுதி பூண்டிருப்பதைக் கண்ணுல் கண்டனர். தமிழர் ஒரு கண்ணியமான சமரசத்துக்காக பேச்சுவார்த்தை நடத்தவும் தயாரென்பதையும் அறிந்தார்கள். இந்த நிலையில் அரசாங்கம், பிரதம மந்திரி திரும்பு முன் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்ருமலிருப்பதே அரசியல் விவேகமாகும். பிரதமர் திரும்பி வந்து, நிலைமையைப் பரிசீலனை செய்யும்வரை நிலைமையை மோசமாக்கக் கூடிய எதையும் செய்யப்படாது.

சமஷ்டிக் கட்சித் தலைவர்களுக்கும் ஒரு பெரிய பொறுப்புண்டு. தங்களது உறுதியையும், தங்களுக்குள்ள ஆதரவின் பலத்தையும் அவர்கள் காட்டிவிட்டார்கள். ஆகவே, பிரதமர் இல்லாத சமயத்தில் இதைப் பலப்படுத்தக்கூடாது. இலங்கையிலுள்ள இரு சமூகங்களுக்குமிடையே பிளவு ஏற்படுத்தக் காத்திருக்கும் விஷமிகளுக்கு இடமளித்துவிடவும்கூடாது. 1958-ம் வருடம் நடந்த பயங்கர சம்பவங்கள் இரு தரப்பினருக்கும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நீண்ட கால, உள்நாட்டுச்சண்டையை இலங்கையால் தாங்க முடியாது. அதன் பொருளாதார அபிவிருத்திக்குத் திட்டமிட்டு, உழைக்க, எல்லாப் பகுதி மக்களும் ஒத்துழைக்க வேண்டியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் மீது தென்னுபிரிக்கப் பிரதமர் கூறிய குற்றச்சாட்டை அவசரமாக இலங்கை நிதிமந்திரி மறுத்துள்ளார். தமது நாட்டில் இன வேற்றுமையே இல்லை என்கிறார் நிதிமந்திரி. ஆனல் "ஒரே இனம், ஒரே மொழி, ஒரே மதம்" என்பதை ஏற்படுத்தக்கூடிய கொள்கையைக் கடைப்பிடிப்பதுடன், இந்திய வம்சாவளியினரான பல்லாயிரக் கணக்கான இலங்கையருக்குப் பிரஜா உரிமையை அற்ப காரணங்களால் மறுத்து வருவதைப் பற்றி வேறு எப்படி வர்ணிப்பது?

சட்டவிரோதக் குடியேற்றத்தை விரும்பினல் ஆயுத மூலமும் தடுக்கவேண்டிய உரிமை இலங்கை அரசாங்கத்துக்கு நிச்சயமுண்டு. ஆனல் இப்போது இலங்கையிலுள்ள எல்லா மக்களின் விஷயமாகத் தங்கள் பொறுப்பை அவர்கள் தட்டிக் கழிக்க முடியாது. தங்கள் அதிகார எல்லைக்குள் வசிப்பவர்களை எப்படி நடத்துகின்றார்கள் என்பதைக் கொண்டே ஒரு அரசாங்கம் நாகரிகமானதா என்பது நிர்ணயிக்கப்படும்.

## ஐயாறன் எழுதுவது

சென்ற 1958-ம் வருட கலக காலத்தில் வகுப்புத் துவேஷத்தைத் தினசரி மூட்டி, பத்திரிகை விற்பனையைப் பெருக்கி வந்த ஒரு சிங்கள தினசரிப் பத்திரிகைக்கு இப்போது மனம் சற்றே மாறியுள்ளதைக் கண்டேன்.

நான்கு நாட்களுக்கு முன் அது எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

"பிரதம மந்திரி லண்டனுக்குப் புறப்படுமுன், வடக்கே நடக்கும் சத்தியாக்கிரகத்தால் "அங்கு அரசாங்கமே நடைபெறவில்லை" என்ருர். இப்போது நிலைமை மோசமாகியுள்ளது. அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை எதிர்த்து, தமிழரசுக் கட்சி ஆரம்பித்த சத்தியாக்கிரக இயக்கம், எல்லாத் தமிழ்ப் பேசும் மக்களும் நடத்தும் இயக்கமாக மாறி அமைதியாக நடந்து பரவி வருகிறது.

அரசாங்கம் அடுத்தடுத்துச் செய்த தவறுகளே, இயக்கம் வலுப்பட்டதற்குக் காரணம். பிப்ரவரி மாதம் 20-ந் திகதி அஹிம்சா சத்தியாக்கிரகிகளை பொலிசார் தாக்கியது அதில் ஒன்று. அத்தியாவசிய சேவைகளை நடத்தப் பொலிசுக்கு உதவியாகத் துருப்புகளை அனுப்பிவைத்தது இரண்டாவது தவறு.

சத்தியாக்கிரகத்தின் முதல் வாரத்தில் கச்சேரிக்கு வெளியே, ரேஷன் அரிசி வழங்கப்பட்டது. இந்த முறையை நிறுத்தியதால், வடக்கிலுள்ள மக்கள் மிகவும் மனக் கசப்படைந்தனர்.

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தின் கதியைக் கண்ட பின்பே, தமிழரசுக்கட்சி, சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்க வேண்டி நேரிட்டிருக்கலாம்.

அரசாங்கத்தின் ஆதரவாளரான கம்யூனிஸ்ட் திரு. பீட்டர் கெனமன், பிப்ரவரி 28-ந் தேதி ஒரு எச்சரிக்கை விடுத்தார். "நாட்டின் நிலை மிக ஆபத்தானதாகும். 1956, 1958-ம் வருட வகுப்புக் கலவரங்களுக்கு முன் இதே நிலையே ஏற்பட்டிருந்தது. ஆகவே இதை மாற்ற உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கேட்டார். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க போதிய முன் யோசனையோ, துணிச்சலோ இந்த அரசாங்கத்துக்கு இல்லையா?"

* * *

அரசாங்கக் கட்சியே "சிங்கள" என்ற ஒரு பிரசாரப் பத்திரிகையை நடத்துகிறது. அது எழுதுவதைப் பாருங்கள்:

சத்தியாக்கிரகம் என்ற போர்வையிலே சமஷ்டிக்கட்சி யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு, இவ்விடங்களில். அரசாங்க நிர்வாகத்தை முறியடிக்க முயன்றது. வரி கொடா இயக்கத்தை ஆரம்பித்து, யாழ்ப்பாணத்தை ஒரு தனி அரசாங்கத்தின் தலைநகராக்கி விடவும் முற்பட்டு, திருக்கோணமலையை, ஓர் அந்நிய வல்லரசிடம் ஒப்புவித்துவிடவும் முற்பட்டது. ஆனல், இராணுவத்தை, சத்தியாக்கிரகப் பகுதிகளுக்கு அனுப்பியதன் மூலம் இந்த முயற்சியெல்லாம் முறியடிக்கப்பட்டது.

அச்சமயத்தில் இராணுவத்தை அனுப்பி வைக்காமலிருந்தால், ரகசிய தமிழ்த் துண்டுப் பிரசுரங்களிலும் படங்களிலும் குறிப்பிட்டது போன்ற காரியங்கள் இதற்குள் நடந்திருக்கும். அத்துண்டுப் பிரசுரங்கள் தமிழரிடையே மட்டும் விநியோகிக்கப்பட்டன.

தமிழர்கள் கீழ்க்கண்ட ஏற்பாடுகளைச் செய்துவந்தனர்:-

1. திருக்கோணமலையில் ஒரு பலமான அந்நிய வல்லரசின கடற்படை, இராணுவம் இவற்றை வரவழைப்பது.

2. சத்தியாக்கிரக இயக்கம் நடக்கும் பகுதிக்கு உணவுப்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியருக்கு கடிதம்

### வெளியேறவில்லை

'ஈழநாடு' 18-3-61 இதழில் 3-ம் பக்கத்தில் மானிப்பாய் கிராமச்சங்க விசேட கூட்டத்தில் ஒன்பது அங்கத்தவர்கள் வெளியேறினர் என்ற செய்தி தவருனது.

கிராமச்சங்க அங்கத்தவர்கள் சத்தியாக்கிரக ஊர்வலத்தில் பங்குபற்றுவது பற்றி ஓர் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. அதில் அங்கத்தவர் திரு. சி. சுப்பிரமணியம் இந்தக் கூட்டம், கிராமச் சங்கத்தின் உத்தியோக பூர்வமான கூட்டமாகுமா என்ற கேள்வியைக் கிளப்பினர். அதற்குத் தலைவர் பதில் அளிக்கையில் இது ஓர் ஆலோசனைக் கூட்டமே தவிர கிராமச்சங்கத்தின் உத்தியோக பூர்வமான கூட்டம் அல்ல என்ருர். பின், பங்குபற்றிய அங்கத்தவர்கள் ஊர்வல ஒழுங்குகள் பற்றி ஆலோசித்தனரேயன்றி எவரும் கூட்டத்தில் இருந்து வெளியேறவில்லை.

வ. க. கணேசவேல்,
அக்கிராசனர்,
மானிப்பாய் கிராமச்சங்கம்.

### பங்கீட்டு அரிசி

பொது மக்களுக்கு வாரம் தோறும் கொடுக்கும் பங்கீட்டு அரிசியை அரசாங்கம் கொடுக்க மறுப்பது மிகவும் கொடுமையான விஷயம். இப்படி அரசாங்கம் செய்வதால் பிரச்சினைகளை வளர்ப்பதாகத்தான் கருதப்படும். அரசாங்கம் மக்களுடைய பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துவிட வேண்டும். பிரச்சினைகளை வளர்ப்பதால் பொதுமக்கள் 25 சதத்திற்கு அரிசி வாங்க முடியாமல் கள்ள மார்க்கட்டுகளில் கூடியவிலை கொடுத்து அரிசி வாங்க நேரிடுகிறது. தற்பொழுது மாவின் விலையை 30 சதமாக மாற்றிவிட்டார்கள் சில வியாபாரிகள். இதை உடனடியாக நிற்பாட்டவேண்டும்.

மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் கண்மூடித்தனமாக இராமல் உடன் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். அதே நேரத்தில் அரிசிப் பங்கீட்டையும் வழமைபோல் உடனடியாக வழங்க வேண்டும்.

நாளுக்குநாள் பிரச்சினைகள் வளர வளர நிலைமை மோசம் அடைகிறது. இதனுல் கஷ்டப்படுபவர்கள் சாதாரண பொது மக்களே. ஆகவே, அரசாங்கம் தாமதம் எதுவுமின்றித் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வ. க. கணேசவேல்

∴ ∴ ∴

மானிப்பாய் கிராமச்சங்க விஷேச கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானம் தீர்மானிக்கப்பட்டது.

20-2-61ல் கச்சேரிக்கு முன்பு சாத்வீகமான முறையில் இருந்த சத்தியாக்கிரகிகளை பொலிசார் மிருகத்தனமாகத் தாக்கியதை வன்மையாகக் கண்டிப்பதோடு ஓர் பகிரங்க விசாரணையும் நடத்தவேண்டும் என்று இக்கிராமச் சங்கம் வேண்டுகிறது. இத்தீர்மானம் பிரதம மந்திரிக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் அனுப்பப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கிராமச்சங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாமல் இருப்பதால் சேர்ந்த வரிப் பணங்களில் இருந்து சம்பளங்களை இப்பேர்ப்பட்ட தவிர்க்க முடியாத காலகட்டங்களில் வழங்க கிராமச் சங்கத்தலைவர்களுக்கு விஷேச அதிகாரம் வழங்கவேண்டும் என்று ஸ்தல ஸ்தாபன ஆணையாளரை வற்புறுத்தவேண்டும் என்று இக் கிராமச்சங்கம் வேண்டுகிறதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

11 அங்கத்தவர்கள் கூட்டத்தில் சமுகமாய் இருந்தார்கள்

# 'இன ஒதுக்கல் கொள்கையை விடமாட்டோம்'

## லண்டனில் தென் ஆபிரிக்க பிரதமர் அறிக்கை

லண்டன், மார்ச் 20

தென்னுபிரிக்கப் பிரதம மந்திரி டாக்டர் வெர்வூட் நேற்று லண்டனிலிருந்து தாயகம் புறப்படுகையில் இன ஒதுக்கல் கொள்கையை தென்னுபிரிக்க அரசாங்கம் தொடர்ந்து பின்பற்றி வருமென்று கூறியுள்ளார்.

லன்டனில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் சலந்துகொள்வதற்காக டாக்டர் வெர்வூட் இங்கு வந்திருந்தார். தென்னுபிரிக்க அரசாங்கம் பின்பற்றும் இன ஒதுக்கல் கொள்கையை லண்டன் மகாநாட்டில் காமன்வெல்த் தலைவர்கள் பலர் கண்டித்துப்பேசியதைத் தொடர்ந்து, தமது நாடு காமன்வெல்த் அமைப்பிலிருந்து விலகிக்கொள்ளப்போவதாக டாக்டர் வெர்வூட் அறிவித்தார். நேற்று டாக்டர் வெர்வூட் லண்டன் விமான நிலையத்தில் பத்திரிகை நிருபர்களுடன் பேசியபோது தென்னுபிரிக்க அரசாங்கம் தொடர்ந்து இன ஒதுக்கல் கொள்கையைப் பின்பற்றும். அதுபோலவே தொடர்ந்தும் பதவியிலிருந்துவரும் என்ருர். தென்னுபிரிக்காவில் ஒரு பெரிய நெருக்கடி ஏற்படக்கூடுமென்றும் அங்கு விரைவில் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறக்கூடுமென்றும் முன்னர் செய்திகள் வெளியாகி இருந்தன. டாக்டர் வெர்வூட் பத்திரிகை நிருபர்களுடன் மேலும் பேசுகையில் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் தென்னுபிரிக்காவின் எதிரிகள் தமது விருப்பத்தை சாதித்துக்கொண்டார்கள். ஆனல் தமது குறிக்கோளை அவர்களால் நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லையென்ருர். தென்னுபிரிக்க தேசிய அரசியல் கட்சி, ஜொகன்னஸ் பர்க்கில் டாக்டர் வெர்வூட்டுக்கு குதூகல வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்துவருகிறது.

ஆஸ்திரேலிய பிரதம மந்திரி மென்ஸீஸ் தன் தாயகம் திரும்புமுன் பத்திரிகை நிருபர்களுக்கு வெளியிட்ட ஒரு அறிக்கையில் தென்னுபிரிக்காவைத் தவிர ஏனைய எல்லாக் காமன்வெல்த் தலைவர்களும் இன ஒதுக்கல் கொள்கையின் சில அம்சங்களையாவது கண்டிக்காமலிருக்கவில்லையென்ருர். தென்னுபிரிக்காவின் கொள்கை நடைமுறை சாத்தியமற்றதினல் தான் ஆஸ்திரேலியாவும் அதைக் கண்டிக்கிறது என்று அவர் கூறினர்.

**நேரு-நாஸர் சந்திப்பு**

பாரதப் பிரதமர் நேரு நேற்று லண்டனிலிருந்து புறபடார். தாயகம் திரும்பும் வழியில் நேரு கெய்ரோவில் இறங்கியபோது அவரை அதிபர் நாஸர் வரவேற்ருர். இன்று நேருவும் அதிபர் நாஸரும் மீண்டும் சந்தித்து காங்கோ உட்பட சர்வதேச விவகாரங்கள் பற்றி ஆலோசனை நடத்துகிருர்கள். செவ்வாய்க்கிழமை கெய்ரோவிலிருந்து நேரு பாரதம் புறப்படுவார்.

**இன ஒதுக்கல் எதிர்ப்பாளர்**

லண்டனில் உள்ள இன ஒதுக்கல் கொள்கையை எதிர்க்கும் இரண்டாயிரம் பேர் நேற்று ஒரு கூட்டம் நடத்தினர்கள். சமீப காலத்தில் தென்னுபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையை எதிர்த்ததினல் அரசாங்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட தென்னுபிரிக்க மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## அங்கோலா நிலைமை குறித்து கவலை

நியூயோர்க், மார்ச் 19

யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ லைபீரியாவில் தமது 3 நாள் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டுள்ளார். அதிபர் டிட்டோவும், லைபீரி அதிபர் டட்மெனும் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் போர்த்துக்கேயர் ஆதிக்கத்திலுள்ள அங்கோலாவில் மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதாகக் கண்டித்துள்ளனர். தென்னுபிரிக்க நிறத்துவேஷம், காங்கோ நிலைமை ஆகியவைபற்றியும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## நாடகாசிரியர் மகாநாடு

புதுடில்லி, மார்ச் 19

இந்தியாவிலுள்ள பலமொழிகளிலும், சிறந்து விளங்கும் நாடக எழுத்தாளர்களைக் கொண்ட மகாநாடொன்று இம்மாதம் 31-ம் திகதி புதுடில்லியில் நடக்கவிருக்கிறது. நாடகத்துறையில் வல்லுனர்களான 30 பேர் இந்த மகாநாட்டில் கலந்துகொள்வர்.

## அயூப்கான் தாயகம் திரும்பினர்

கராச்சி மார்ச் 20

பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் லண்டனிலிருந்து இன்று கராச்சிதிரும்பினர். விமானநிலையத்தில் அவர் நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் 'தென்னுபிரிக்கா காமன்வெல்த் நாடுகளின் யோசனைக்குச் செவி சாய்க்கத் தவறியது. எனவே காமன்வெல்த் அமைப்பிலிருந்து அது விலக வேண்டியது அவசியமாகிவிட்டது. என்ருர்.

பாரதப் பிரதமருடன் தாம் லண்டனில் பேசியது குறித்து அவரிடம் நிருபர்கள் வினவிய போது, தாம் நேருவுடன் பொதுவானபிரச்சினைகள்பற்றி பேசியதாகவும், காஷ்மீர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதின் அவசியத்தைத் தாம் வற்புறுத்திய போது நேரு மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

## நேரு-அயூப் ஆலோசனை

லண்டன், மார்ச் 19

பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானும், பாரதப் பிரதமர் திரு. நேருவும் லண்டன் மகாநாட்டுக்குவந்த பின்பு முதல் தடவையாக கடந்த 16-ம் திகதி சந்தித்து தனிப்பட்ட முறையில் ஆலோசனை நடத்தினர்கள்.

அன்றையத் தினம் காலை காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டபின்னர் ஜனதிபதி அயூப்கான் லண்டனிலுள்ள இந்திய ஸ்தானிகர் வாசஸ்தலத்திற்குச் சென்று பிரதமர் நேருவைச் சந்தித்தார்.

இச் சந்திப்பிற்குமுன் ஜனதிபதி அயூப்கானும், பிரதமர் நேருவும் கடந்த செப்டம்பர் மாதத்தில் ராவல்பிண்டியில் சந்தித்து இந்துநதிசம்பந்தமான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டார்கள்.

பிரதமர் நேருவை, அயூப்கான் சந்தித்தபொழுது பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் அன்சூர்காதிரும் அவருடனிருந்தார்.

இருதலைவர்களும், தங்கள் இருநாடுகளுக்கு மிடையிலுள்ள பொதுவான பிரச்சினைகள் பற்றி ஆலோசனை நடத்தியதாகத் தெரிகிறது.

## வடபகுதியில் எண்ணெய் ஊற்று ?

கொழும்பு, திங்கள்

இலங்கையில் பூமியினடியில் எண்ணெய் ஊற்றுக்கள் இருக்கக்கூடுமென வர்த்தக அமைச்சர் திரு. இலங்கரத்னவுக்கு ரஷ்யர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

வடபகுதியிலும் வடமேற்குப் பகுதிகளிலும் எண்ணெய் ஊற்றுக்கள் உண்டா என்பது பற்றி இலங்கை கனிப்பொருள் ஆராய்ச்சிப்பகுதியினர் விரைவில் பரிசோதனை நடாத்துவர் எனத் தெரிகிறது.

## வர்த்தகர் தமிழியக்கம்

### சமாஜத்தோடு இணைக்கமுடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாவட்ட வர்த்தகர்களின் ஆலோசனைக் கூட்டமொன்று சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணக் கிளை வியாபாரச் சங்கக் கட்டடத்தில் திரு. சி. வி. இராசசேகரம் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வர்த்தகர் தமிழியக்கங்களை உருவாக்கி அவற்றை யாழ்ப்பாணம் மாவட்ட வர்த்தகர் ஐக்கிய சமாஜத்தின் கீழ் இணைப்பதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## இராணுவத்தைவாபஸ் பெறக் கோரிக்கை

மட்டக்களப்பு ஞாயிறு

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலைநாட்டிலும் நிறுத்தப்பட்டிருக்கும் ராணுவத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம், மட்டக்களப்பு நகரசபைத் தலைவரால் கூட்டப்பட்ட கிராமச் சங்கங்கள் பட்டின சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்களைக் கொண்ட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. சத்தியாக்கிரகிகளைப் பொலிசார் தாக்கியதைக் கண்டித்தும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## இரு கால்களையும் இழந்தார்

வவனியா, திங்கள்

தாம் ஏறிவந்த சைக்கிள் வண்டி புகைவண்டி ஒன்றின் மீது மோதியதின் காரணமாக ஈஸ்வரலிங்கம் என்ற 26 வயது வாலிபர் தமது இரு கால்களையும் இழந்தார். வவனியா ரயில்வே கடவையில் இந்தச் சம்பவம் நடந்தது.

ஈஸ்வரலிங்கம் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலைமையில் இருந்து வருகிருர்.

## பருத்தித்துறையில் சத்தியாக்கிரகம்

### வாணி கலைக் கழகம் தீர்மானம்

கரவெட்டி வாணி கலைக் கழக மாணவ மாணவியர் 25-ந் திகதி சனிக்கிழமை பருத்தித்துறையிலுள்ள வடமராட்சிக் காரியாதிகாரி காரியாலயத்தில் சத்தியாக்கிரகம் செய்யத் தீர்மானித்துள்ளனர். இதற்கு உடுப்பிட்டி எம். பி திரு. எம். சிவசிதம்பரம் தலைமை தாங்குவார்.

அன்று மாலை இவர்கள் யாழ்ப்பாணக் கச்சேரிக்குச் சென்று மறியல் செய்வார்களெனத் தெரிகிறது.

# அங்கோலா கலகத்தில் 70 பேர் கொலை

நியுயோர்க், மார்ச் 20

போர்த்துக்கல் ஆதிக்கத்திலுள்ள அங்கோலாவில் மீண்டும் ஏற்பட்ட கலகங்களில் இதுவரை 70 பேர்வரை கொல்லப்பட்டிருப்பதாக செய்திகள் கிடைத்துள்ளன. கலகங்களின் காரணமாக கொலையுண்டவர்கள் சுதேசிகளாக, அல்லது ஐரோப்பியரா வென்பது தெளிவாகத் தெரியவில்லை.

காங்கோவிலிருந்து வந்த ஆயுதம் தரித்த பயங்கரவாதிகள் அங்கோலா சுதேசிகளுடன் சேர்ந்து கலகம் விளைவித்ததாகவும், கலகத்தை அடக்கத் துருப்புகள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் போர்த்துக்கல் ராஜய கவர்னர் அறிவித்திருக்கிருர். அங்கோலாவின் வடபிரதேசத்தில் ஒளித்திருந்த வெள்ளையர்களும் பெண்கள், குழந்தைகளும் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

பயங்கரவாதிகள் காங்கோவிலிருந்து வந்தார்கள் என்ற செய்தியை லியப்போட்வில்லிலுள்ள ஐ. நா. அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

## எடின்பரோவில் பாரதப் பிரதமர்

லண்டன், திங்கள்

இந்தியப்பிரதம மந்திரி திரு. நேரு நேற்று எடின்பரோவிலிருந்து லண்டன் திரும்பினர். எடின்பரோ பல்கலைக்கழகத்தில் நேரு பேசியபொழுது ஏராளமான மாணவர்கள் அங்கு கூடியிருந்தார்கள். கிளஸ்கோ பல்கலைக்கழக மாணவர்களும் நேருவின் பேச்சைக் கேட்க எடின்பரோவுக்கு வந்திருந்தார்கள்.

மாணவர்களின் மத்தியில் நேரு பேசுகையில் பெரிய லட்சியங்களுக்காகப் பாடுபடுவதைவிட வாழ்க்கையில் வேறு திருப்தி இல்லை என்று குறிப்பிட்டார்.

## சமூகத்துக்கு ஏற்படும் ஆபத்து

ஹைதராபாத், ஞாயிறு

சமூகத்தில் உள்ள கேடுகளை தடுத்து சீர்திருத்துவது பற்றி இங்கு நடைபெற்ற கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேமந்திரி திரு.ராஜு கூறியதாவது:-

மேகவியாதிகள் இரகசிய தன்மை வாய்ந்தவையாக விருப்பதால் அவற்றைக் கட்டுப்படுத்துவது மிகச் சிக்கலாகவிருக்கிறது. விபசாரத்துக்கு என்று ஓர் ஊரில்தனி இடம் ஒதுக்குவது எவ்வளவோ நல்லது. ஏனென்ருல் இந்நோயை பல இடங்களுக்கு சென்று கட்டுப்படுத்த முயற்சிப்பதிலும் பார்க்க ஒரே இடத்தில் கட்டுப்படுத்திவிடலாம் என்று மந்திரி குறிப்பிட்டார்.

## உல்லாசப் பிரயாணிகளுக்கு ஹோட்டல்

சென்னை மார்ச் 18

உல்லாசப்பிரயாணிகளுக்கு சென்னை நகரத்தில் அரசாங்க ஹோட்டல் ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. கடல் காட்சியைக் கண்டு களிக்கும் முறையில் இந்த ஹோட்டல் அமைக்கப்படுமென்று நிதி மந்திரி திரு. சுப்பிரமணியம் தமிழ் நாடு மேல் சபையில் அறிவித்திருக்கிருர்.

### உயர்கலை பயில லண்டன் பயணம்

கரணவாய் வடக்கைச் சேர்ந்த செல்வி. அனுசா சிவலிங்கம் இம்மாதம் லண்டன் புறப்படுகிருர். நடனம், சங்கீதம், தையல், சமையல் முதலிய கலைகள் பயில்வதற்காக அவர் அங்கு செல்கின்ருர். ஏற்கனவே லண்டனில் பீ. எச். டி பட்டம் பெறப் பயின்றுவரும் டக்டர் எஸ். சிவலிங்கம் இவரின் தகப்பனராவர்.

'ஹென்றி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி
★ சேட் ★ ஷோட்
★ காற்சட்டை ★

ஹென்ற்லி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு, நிறைந்த பலனுடையதாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிட்டெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை

யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு ஏக விநியோகஸ்தர்கள்:
ஆதம்பாய் ஸ்ரோஸ்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. இவை பற்றிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்,
Advt. 58



## திருமண அழைப்பு

### சின்னத்தம்பி-பவளம்

செல்வன் செ. சின்னத்தம்பி (இ. போ. ச. பரிசோதகர் யாழ்ப்பாணம் பஸ் நிலையம்) அவர்களுக்கும் வல்வெட்டி வேற் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த செல்வி பவளம் பொன்னையாவுக்கும் 22-3-61 புதன்கிழமை காலை 6.25க்கும் 8 மணிக்கும் இடையேயுள்ள சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெறும். நண்பர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

**செ. சின்னத்தம்பி**

வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.
Advt-70


## வெற்றி கண்டார்

புதுடில்லி; மார்ச் 20

இமாலயத்தின் எவரெஸ்ட் மலைத்தொடருக்கு அருகிலுள்ள அம்லா டப்லா சிகரத்தின் மீது பிரிட்டிஷ் மலையேறும் நிபுணரான டாக்டர் வார்ட் என்பவர் ஏறி வெற்றி கண்டிருக்கிறார்.

# ஆசிரியர்கள் இடமாற்றம் பற்றிய புதிய விதிமுறை

**கூட்டுச் சபை செய்த திருத்தங்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள் இடமாற்றம் பற்றிய திட்டம் இங்கு வெளியிடப்படுகின்றது.**

இடமாற்றம் சம்பந்தமான ஒரு ஒழுங்குத்திட்டம் இல்லாதிருப்பது அரசாங்க ஆசிரியர்களுக்கிடையே ஒரு பாதுகாப்பின்மையை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்க சேவையிலுள்ள சுமார் 40,000 ஆசிரியர்களில் பெரும்பாலோர் இது பற்றி அதிருப்தி கொண்டவர்களாய் இருக்கிறார்கள். இடமாற்றம் செய்வதில் பொருளாதாரப் பிரச்சினை, வாழ்க்கைச் செலவு முதலியன பாரதூரமாக அவர்களைப் பாதிப்பதால்தான், கடந்த சில ஆண்டுகளாக நடைபெறும் இடமாற்ற முறையைப் பற்றி ஆசிரியர்கள் அதிர்ச்சியடைந்துள்ளார்கள்.

அதிருப்தியடைந்த ஒருவர் தம் கடமையைத் திறமையுடன் நிறைவேற்றுவார் என எதிர்பார்க்க முடியாது. எனவேதான், முடிந்தவரை தாங்கள் விரும்பும் இடத்திலேயே இருக்க கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனக் கோரப்படுகிறது.

நாட்டின் சில பகுதிகள் ஆசிரியர்களைக் கவராதவையாய் இருக்கின்றன. தேவைக்கேற்ப சிறந்த ஆசிரியர்கள் அங்குள்ள பாடசாலைகளில் அமர்த்தப்பட வேண்டும்.

கஷ்டமான பகுதியில் அல்லது கஷ்டமான பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் அதிக காலம் அங்கு இருக்கும்படி செய்யக்கூடாது. ஆனால் பாடசாலைகளைக் கவனிக்க இயலாதபடி அவரது பதவிக்காலத்தை அங்கு மிகவும் குறைத்துவிடவும் கூடாது. கஷ்டமான பகுதியாய் இருந்தால் ஒரு ஆசிரியரை 2 வருடமும், கஷ்டம் குறைந்த பகுதியாய் இருந்தால் 4 வருடமும் விட்டுவைக்க வேண்டும்.

11 கல்வி மாவட்டங்களில் சொந்த வீடுகளைக்கொண்ட ஆசிரியர்கள் இருக்கிறார்கள். வெளியில் சேவைசெய்த ஆசிரியர்களை இப் பகுதிகளுக்கு மாற்றுவதின் மூலமும், பின் மாவட்டத்திற்குள்ளேயே அவர்களை மாற்றுவதின் மூலமும் இத்திட்டத்தை அமுல் நடத்தலாம். இம்மாவட்டங்கள் பின்வருமாறு:-

சிலாபம், அம்பாந்தோட்டை, குருநாகல், கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை, கண்டி, நுவரேலியா, பதுளை ஆகியன. இவைகளில் சிலவற்றில் ஆசிரியர் பற்றாக்குறையிருக்கிறது. சிலவற்றில் அதிக ஆசிரியர்கள் இருக்கிறார்கள். கண்டியிலுள்ள அதிகப்படி ஆசிரியர்களை மாத்தளை அல்லது நுவரேலியாவுக்கும், கேகாலையிலிருந்து இரத்தினபுரி, பதுளை, குருநாகல், சிலாபம், அம்பாந்தோட்டை ஆகிய இடங்களுக்கும் மாற்றுவதின் மூலம் சுயதேவைப்பூர்த்தியைச் சாதிக்கலாம். புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை, திருக்கோணமலை, அம்பாறை, மொனராகலை ஆகிய இடங்களில் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது.

நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் அதிகப்படியான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பற்றாக்குறை பிரதேசங்கள் ஆசிரியர்களின் விஷயத்தில் சுயதேவைப் பூர்த்தியடையும் வரை, அதிக ஆசிரியர்களைக் கொண்ட மாவட்டம், குறைந்த பகுதிகளுக்கு ஆசிரியர்களைக் கொடுக்கவேண்டும்.

ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் தொகை எவ்வளவு குறைவாக இருக்கின்றதோ அதே அளவு அதிகமான ஆசிரியர்கள் வேறு பள்ளிக்கூடங்களில் இருக்கின்றனர். எனவே, அதிகமான ஆசிரியர்களை உடைய மாவட்டத்தில் தொழில்புரியும் ஒரு ஆசிரியர் குறைந்த ஆசிரியர்களையுடைய மாவட்டத்தில் சிலவருடங்கள் தொழில்புரிய செய்வதின்மூலம் இத்திட்டத்தினால் ஏற்படும் பளுவை எல்லா ஆசிரியர்களும் சமமாகப் பகிர்ந்துகொள்ள முடியும். இம்மாதிரியான இடமாற்ற திட்டமொன்றை அமுல் நடத்தும் போது அதிக தொகையான ஆசிரியர்களையுடைய பகுதிகளிலிருந்துகுறைந்த ஆசிரியர்கள் உள்ள பகுதிக்கும் குறைந்த ஆசிரியர்கள் உள்ள பகுதிகளிலிருந்து அதிக ஆசிரியர் உள்ள பகுதிக்கும் இடமாற்றப்படுவதற்கான ஆசிரியர்கள் கூட்டம் கூட்டமாகத் தெரிவு செய்யப்பட வேண்டியிருக்கும்.

(தொடரும்)

# தமிழரைப் பகிஷ்கரிக்க ராஜரத்தின பிரசாரம்

கொழும்பு, ஞாயிறு

தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகம் கைவிடப்படும் வரை தமிழர்களைச் சிங்களவர்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்று கே. எம். பி. ராஜரத்ன கேட்டுக்கொண்டார்.

நேற்று மாலை தெமட்டக்கொடையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் வெலிமடை எம். பி.யும், ஜாதிக விமுக்திப் பெரமுனையின் தலைவருமான திரு. ராஜரத்தின பேசினார்.

நாட்டைப் பிரிக்கும் சமஷ்டி வாதிகளின் நடவடிக்கையை நிறுத்துவதற்கு அரசாங்கம் எதுவும் செய்யவில்லையென்று குற்றஞ் சாட்டிய திரு. கே. எம். பி. ராஜரத்ன மேலும் பின்வருமாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தை மட்டும் சமஷ்டி வாதிகள் கேட்கவில்லை. தொண்டமான் மூலமாக மத்திய மாகாணத்தையும் அவர்கள் எடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள். அது மட்டுமல்ல கொழும்பையும் எடுத்துக்கொள்வதுதான் அவர்கள் திட்டம். கொழும்பிலும் இதர இடங்களிலுமுள்ள தமிழ் வியாபாரிகள் சமஷ்டி வாதிகளுக்கு நிதி உதவியளிக்கிறார்கள். சிங்களவரிடமிருந்து தமிழருக்கு ஒரு ரூபாய் கூடப் போகாமல் நாங்கள் இதைத் தடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள சமஷ்டிவாதிகள் அவசர கால நிலையை விரும்புவதற்கேற்ப நாம் அவசரப்படக்கூடாது. சமஷ்டிவாதிகள் விரும்புவதை அரசாங்கம் செய்யக்கூடிய விதத்தில் நாம் எதையும் செய்யக்கூடாது.

தமிழரைப் பகிஷ்கரிக்கும்படி பல இடங்களுக்கும் சென்று வேண்டுகோள் விடப்போவதாகவும் திரு. ராஜரத்ன தெரிவித்தார்.

## புலோலி அர்ச். சூசையப்பர் திருநாள்

நேற்று முன்தினம் புலோலி அர்ச். சூசையப்பர் கோவில் திருநாள் சுற்றுப்பிரசாரம், பாடற்பூசை முதலியவற்றுடன் ஆரம்பித்தது. யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து விழாவில் கலந்துகொண்டனர்.

## வடமராட்சி ஆசிரியர் சங்கப் போட்டிகள்

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் ஆண்டுதோறும் நடைபெறும் இயல் இசைப் போட்டிகள் இம்மாத இறுதியில் நடக்கவிருக்கின்றன.


# சுகவீனத்திற்குப் பிறகு துரித ஆரோக்கியத்தை அளிக்கவல்லது




துரித சுகம் மருந்தினால் மட்டுமன்றி விரைவாகவே உடல் தேர்தலிலும் தங்கியிருக்கிறது. இழந்த பலத்தை துரிதமாகப்பெற உடலுக்குப் பிரத்தியேக போஷாக்குச் சக்தி அவசியமாகின்றது. சரீர வலிவுக்கும் வனப்பிற்கும் தேவையான ஊட்டச்சத்துக்களும் நெஸ்டோ மோல்ட்டில் அபரிமிதமாக உள்ளபடியால் துரித நிவாரணத்திற்குத் தேவையான பிரத்தியேகப் போஷாக்குச் சக்தியை அளிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

# நெஸ்டோமோல்ட்

மோல்டட் மில்க்

# "வெற்றிகிடைக்கும்வரை போராடவேண்டும்"

## வட்டுக்கோட்டை எம். பி. கோரிக்கை

வட்டுக்கோட்டை, திங்கள்

"இன்று நடைபெற்றுவரும் அறநெறிப் போராட்டம்தான் தமிழ் பேசும்மக்களின் இறுதிப் போராட்டம்" என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இந்துவாலிப சங்கத்தினரின் ஆதரவில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அறப்போராட்டம் வெற்றி பெறுவதற்காக நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் தேவார திருவாசகங்கள் பயபக்தியுடன் ஓதப்பட்டன. திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் பக்திப்பாடல்கள் பாடினார்.

திரு. க. வயிரவநாதர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் அறப்போர் வெற்றி பறும்வரை இன்னல்கள் எத்தனைகோடிவரினும் சிறிதும் சளைக்காது உறுதியோடு ஒவ்வொருவரும் உழைக்கவேண்டும். அறப் போராட்டத்தில் ஈடுபடுவோர் அனைவரும் ஆடையாபரண அலங்காரங்களையும் ஆத்திரம், அவசரம், ஆரவாரம் ஆகியவைகளையும் விடுத்து எளிமை, அமைதி, அடக்கம், அன்பு, அஹிம்சை ஆகிய அறநெறிப்பண்புகளை மேற்கொள்ளவேண்டும்".

அடுத்து வட்டுக்கோட்டைக் கிராமச் சங்கத்தலைவர் திரு. செ. சின்னத்தம்பி பேசுகையில் அறப்போராட்ட நெறியைப் பற்றியும் மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய வழி முறைகள் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்.

---

### இலங்கையில் செக். வானொலி தூதுகோஷ்டி

கொழும்பு, திங்கள்

செக்கோஸ்லோவேகிய வானொலி நிபுணர்கள் மூவரைக் கொண்ட ஒரு நல்லெண்ணத் தூது கோஷ்டி நேற்று இலங்கை வந்து சேர்ந்தது. இலங்கையில் இக்கோஷ்டியினர் பல்வேறு முக்கிய இடங்களுக்கு விஜயம் செய்வர் என்று தெரிகிறது. இலங்கை வானொலியைத் திருத்தி அமைப்பதற்கான ஒரு ஒப்பந்தம் செக்கோஸ்லோவேகிய வானொலி தூது கோஷ்டிக்கும், இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் கைச்சாத்தாகலாம்என்றுகருதப்படுகிறது. தென்கிழக்காசியாவில் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டுள்ள இவர்கள் இதுவரை பாரதம், இந்தோனேஷியா, பர்மா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளனர். வியாழக் கிழமையன்று இவர்கள் இலங்கையைவிட்டுப் புறப்படுவார்கள்.

---

### பங்களூரில் மின்சார ஆராய்ச்சி நிலையம்

புதுடில்லி, மார்ச் 20

புதிதாக மின்சார உற்பத்தி ஆராய்ச்சிநிலையங்கள் இரண்டு பெங்களூரிலும், போபாலிலும் நிறுவப்படவிருக்கின்றன.

---

### யாழ்ப்பாணத்தில் கள்ள நோட்டு

காங்கேசன்துறை, திங்கள்

யாழ்ப்பாணத்தில் கள்ள நோட்டு நடமாட்டம் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணம் கச்சேரியடியில் பெட்டி கடகம் விற்கும் வல்லுவெட்டித்துறையைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் அச்சுவேலிவாசியெனக் கூறிக்கொண்ட ஒருவர் இரண்டு ரூபாய்க்குப் பெட்டி கடகம் வாங்கிய பின்னர் பத்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தார். மிகுதிப் பணமாக 3 ரூபாய் கிடைத்தது. அதனைப் பெற்றுக்கொண்டு அவர் கம்பி நீட்டிவிட்டார்! பின்னர்தான் அப்பெண்மணிக்கு அது கள்ள நோட்டு எனத் தெரியவந்தது. இந்த நோட்டை நமது நிருபர் பார்த்தபோது உண்மையான நோட்டுக்கும் கள்ள நோட்டுக்குமுள்ள வித்தியாசம் நன்கு தெரிந்தது.

---

### மின்னல் தாக்கிப் பெண் மரணம்

அம்பலாங்கொடை திங்கள்

45 வயதான ஒரு பெண் மின்னல் தாக்கியதின் காரணமாக மரணமானார். பட்டப்பொல, மனன்பிட்டிய என்ற இடத்தைச் சேர்ந்த அப்பெண் மரண வீடொன்றுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் மின்னலால் தாக்கப்பட்டு மரணமானார் என்று அறிவிக்கப்பட்டது.

---

சிம்லா, மார்ச் 20

இங்கு கடந்த சில தினங்களாக மழையும், உறைபனியும் பெய்வதால் உஷ்ணம் 8 டிகிரி குறைந்துள்ளது.

---

## சத்தியாக்கிரக செய்திகள்

வாழைச்சேனை கிழக்கிலங்கை கடுதாசித் தொழிற்சாலை ஊழியர் சுமார் அறுநூறுபேர் ஊர்வலமாக மட்டக்களப்பு கச்சேரிக்குச் சென்று சத்தியாக்கிரக நிதிக்கு பணமுடிப்பொன்றை வழங்கினார்கள்.

⁂ ⁂ ⁂

மட்டக்களப்பு கச்சேரியின் முன்னுள்ள ஆலமரத்தின் அடியில் வேல் ஒன்று ஊன்றப் பெற்று இருக்கிறது. சத்தியாக்கிரகிகள் காலையும் மாலையும், அதற்கு பூஜை செய்கிறார்கள்.

⁂ ⁂ ⁂

மானிப்பாய் சிறிமண்டபத்தில், மானிப்பாய் தமிழ்உரிமை இயக்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. வித்துவான் வேலன், கிராமச்சங்க உறுப்பினர் சி. சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட பலர் பேசினார்கள்.

⁂ ⁂ ⁂

மட்டக்களப்பு கச்சேரிமுன் மறியல்செய்த ஒருவரை கடந்த வெள்ளியன்று பாம்பு தீண்டிவிட்டது. அவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். "விடம் தீண்டினலும் வீரம் குறையவில்லை, என்னை சத்தியாக்கிரகம் செய்ய அனுமதியுங்கள்" என்று அவர் கூறுகிறாராம்.

⁂ ⁂ ⁂

கல்லடிஉப்போடை

கல்லடி உப்போடை பேச்சியம்மன் ஆலயத்தில் மொழிப் போராட்டம் வெற்றிபெறுவதற்காக விசேஷ ஆராதனைகள் உள்ளூர் மாதர் முன்னணியின் ஆதரவில் நடைபெற்றது.

⁂ ⁂ ⁂

கல்முனையிலிருந்து இருபத்தைந்து மைல்களுக்கப்பாலுள்ள மட்டக்களப்புக்கு தினமும் சத்தியாக்கிரகம் செய்வதற்காக ஏராளமான தொண்டர்கள் சென்றவண்ணமிருக்கிறார்கள். கல்முனையிலும் விரைவில் மறியல் இயக்கம் ஆரம்பமாகவிருக்கிறது.

⁂ ⁂ ⁂

மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் உடனடியாகப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க வேண்டுமென்றும், வழமைபோல் அரிசிப் பங்கீடு நடக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் பிரதம மந்திரியையும், உணவு மந்திரியையும், வடமாகாண அதிபரையும் மானிப்பாய் கிராமச் சங்கத் தலைவர் ஒரு கடிதம் மூலம் கேட்டிருக்கிறார்.

---


### மரண அறிவித்தல்

நாகமுத்துவின் அருமைக் கணவரும் வைரவப்பிள்ளை, நீர்ப்பாசன அலுவலகம், கொழும்பு; செல்லையா, நீர்ப்பாசன அலுவலகம், அநுராதபுரம்; சின்னத்துரை மத்திய வங்கி கொழும்பு முருகுப்பிள்ளை, கச்சேரி யாழ்ப்பாணம்; திருமதி செல்லம்மா காசி விசுவநாதன் அவர்களின் தந்தையும் மெர்க்கண்டையில் வங்கியைச் சேர்ந்த காசி விசுவநாதனுடைய மாமனருமாகிய முத்துசிவ பதமடைந்து விட்டார். அன்னாரின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை (21-3-61) மாலை 4 மணிக்கு காங்கேசன்துறை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

Advt-71



இன்பகரமான 3-வது வாரம்!

பார்த்துப் பயன் அடைய வேண்டிய பண்பு நிறைந்த படம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)

நடிகர்கள்: என். டி. ராமராவ், வி. நாகையா, டி. எஸ். பாலையா, பி. எஸ். வீரப்பா

நடிகைகள்: சௌகார் ஜானகி, பி. கண்ணம்பா, கிரிஜா, மோகன



ராஜ சேவை

பின்னணி: திருச்சிலோகநாதன், ஏ. எல். ராகவன், கண்டசாலா, எஸ். ஸி. கிருஷ்ணன், பி. சுசீலா, பி லீலா, எஸ் ஜானகி.

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது திரையிடப்படுகிறது!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி, சரோஜாதேவி நடித்த

நாடோடி மன்னன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

மனோகரா (யாழ்ப்பாணம்)

ஜனக் ஜனக் பாயல் பாஜே (நடனங்கள் நிறைந்த கலர்ப்படம்)

கோபி கிருஷ்ண - சந்தியா பகவான் நடித்தது.

# 3000 போத்தல் கள்ளச் சாராயம்

## பதின்மூன்று பேர் கைது

கொழும்பு, திங்கள்
வெலிக்கடையைச் சேர்ந்த கோஸ்வத்தை என்ற இடத்தில் சட்டவிரோதமாகச் சாராயம் வடிக்கப்பெற்ற குதம் ஒன்றைப் பொலிசார் கண்டுபிடித்தனர். பொலிசார அந்த இடத்தில் திடீரென்று தோன்றியபோது அங்கு சாராயம் தயாராகிக்கொண்டிருந்ததாம்.

கள்ளத்தனமாக வடிக்கப்பெற்ற சாராயம் 3000 போத்தல்களுக்கதிகமாகப் பொலிசாரிடம் அகப்பட்டிருக்கிறது. சாராயம் வடிப்பதற்கான "கோடா" என்ற பொருள் 100 பீப்பாக்களில் இருந்தது. அதனையும் பொலிசார்கைப் பற்றியுள்ளனர். இதுசம்பந்தமாகப் பொலிசார் 13 பேரைக் கைதுசெய்து கோட்டில் ஆஜர் செய்தனர்.

## ஜயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களை ரகசியமாக இறக்குமதி செய்வது.

3. லட்சக்கணக்கான 'கள்ளத்தோணிகளை' வரவழைக்க, வல்வெட்டித்துறையை இறங்கு துறையாக்குவது..."

* * *

மேலும் அதே பிரசுரம் தலையங்கத்தில் எழுதுவதாவது:-

சமஷ்டி இயக்கம், என்று கூறப்படுவதற்குப் பின்னே யூ. என். பி. யும், விமுக்தி பெரமுனையும் சேர்ந்து பெரிய சதி செய்வது தெளிவாகும். இரு இடதுசாரிக் கட்சிகளும், வடக்கே சமஷ்டிக்காரர்களை ஆதரித்து உதவுகிறார்கள். வடக்கே சத்தியாக்கிரகிகளுக்கு ஒரு பெரிய வல்லரசு உதவிசெய்வதாகவும் தெரிகிறது.

வகுப்புக்கலகம் ஏற்பட்டால் இலங்கை மற்றொரு காங்கோ ஆகிவிடுமென்பது அவர்கள் அறிவர். இங்குசமதர்மம் வரக் கூடாதென்றே அவர்கள் சதிசெய்கின்றனர்.

சத்தியாக்கிரகத்தை அடக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கை எவ்வித விசேஷமானதென்பதைப் பொதுமக்கள் உணர்ந்துவிட்டனர்!"

* * *

எப்படி இந்தப் பேத்தலும் பிதற்றலும்! இதை எல்லாம் இங்கு பிரசுரித்து, இப்பந்தியை அசுத்தப்படுத்த என் பேனா பெரிதும் தயங்கியது.

ஆனால் பத்திரிகைகளை தேசியமயமாக்க மீண்டும் முற்பட்டுள்ள இந்த அரசாங்கமே, தான் நடத்திவரும் ஒருபத்திரிகை, எவ்வளவு பொறுப்புடன், அடக்கமாக, தேச ஒற்றுமைக்காக எழுதுகிறது என்பதை நீங்கள் சற்றே தெரிந்துகொள்ள வேண்டுமென்றே இதை இங்கு கொடுத்தேன். மன்னிக்கவேண்டும்.

* * *

"மக்களுக்குப் பணிசெய்வதில் கடவுளைக் காண நான் முயற்சிசெய்து வருகிறேன். நான் அறியும் ஒவ்வொரு உயிரிலும் அவன் இருக்கின்ரான்".

—மகாத்மாகாந்தி.

## சத்தியாக்கிரகிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தனர். ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் நேற்று நண்பகல் 12 மணிக்கு ஒலித்த மணியின் ஓசை கச்சேரி முன்பும் "கணீர்" என்று கேட்டது. மணியோசை கேட்டதும் சத்தியாக்கிரகிகள் அமைதியாக எழுந்து நின்றனர். வீதியில் சென்றுகொண்டிருந்த வாகனங்களும் நிறுத்தப்பட்டன. எல்லோரும் கூப்பிய கரங்களுடன் 2 நிமிஷங்கள் மௌனமாகக் கடவுளை வழிபட்டனர்.

### விதானையார் முயற்சி

கச்சேரிக்குள் சென்று பங்கீட்டரிசி பெறுவதற்கான அனுமதிச்சீட்டுப் பெறுவதற்கு வியாபாரிகள் எவரும் வரக்கூடுமென எதிர்பார்த்து மறியல் செய்வதற்காக சில தொண்டர்கள் 'ஓல்ட்பார்க்' வாசலுக்குச் சமீபத்தில் காத்திருந்தனர். கச்சேரிக்குள் செல்வதற்காக ஒரு விதானையார் மட்டும் முயற்சி செய்தாராயினும் கடைசியில் அவர் கச்சேரிக்குள் செல்லாமலே திரும்பினர்.

## இலட்சியத்தை அடையும்வரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சியத்தை அடைவதற்காக நாங்கள் உறுதியான ஒரு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். கைவிடுவதென்ற பேச்சுக்கே இடமில்லை" என்று திரு. செல்வநாயகம் கூறினர்.

இலட்சியத்தை அடையும் வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறும்" என்றும் திரு. செல்வநாயகம் அறிவித்தார்.

## பங்கீட்டு அரிசி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும்படி விதானைமார் மூலம் கேட்டிருந்தார்.

அரசாங்க அதிபரின் இந்தப் புதிய வேண்டுகோள் பற்றி யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கூப்பன் கடைக்காரரும் சங்கக்கடை மனேஜர்களும் நேற்று முன்தினம் மாலை கூடி ஆலோசனை செய்தனர். கச்சேரிக்குச் சென்று பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுப் பெறுவதில்லையென்று கூட்டத்தில் அவர்கள் முடிவு செய்தனர்.

### எவரும் போகவில்லை

பங்கீட்டரிசி பெறுவதற்கான அனுமதிச் சீட்டுக்கள் பெற்றுக்கொள்ள வியாபாரிகள் எவரும் நேற்றுக் கச்சேரிக்குள் செல்லவில்லை.

கிரிக்கட்

## இந்துக்கல்லூரிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி, யூனியன் கல்லூரி, ஹார்ட்லிக் கல்லூரி ஆகியவற்றுக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட்போட்டியில் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது. இக்கல்லூரியைச் சேர்ந்த ரி. செல்வராஜா திறமையாக விளையாடினர்.

## சலவைத் தொழிலாளர் சங்கம்

யாழ்ப்பாணம், செவ்.
இலங்கை சலவைத் தொழிலாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை, எதிர்வரும் 2ம் திகதி ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கு முடிவுசெய்திருக்கிறது. சத்தியாக்கிரக இயக்க நிதிக்கென ஒரு பணமுடிப்பு வழங்குவதெனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

### தமிழ்மொழி பாதுகாப்புக்கு மாவையில் பிரார்த்தனை

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் அடுத்தமாதம் 7-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் 'தமிழ் மொழி பாதுகாப்பு ஐந்தாம் வருடப் பிரார்த்தனை' மாவை முருகன் பிரார்த்தனைக் குழுவினரால் நடத்தப்படும். அன்று விசேஷ ஆராதனைகளும் அபிஷேகமும் நடைபெறும்.

## வழிபாடுபற்றி துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம், செவ்.
ஆபத்துக்காலத்தில் ஆண்டவனை வேண்டிக்கொள்ள வேண்டுமென்ற வாக்கியங்களைக் கொண்ட துண்டுப்பிரசுரங்கள் சத்தியாக்கிரகிகள் மத்தியில் விநியோகிக்கப்படுகின்றன. கந்தர் மடம் அரசடி வீதியிலுள்ள கிறிஸ்தவ சமுதாயத்து ஊழியர் விடுதலை மண்டபத்தைச் சேர்ந்தவர்கள் இத்துண்டுப்பிரசுங்களை வெளியிட்டுள்ளனர்.

## துண்டுப் பிரசுரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். சமாஜங்களின் பிரதிநிதிகள் பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு வரத் தவறியதால் உத்தரவாதம் பெற்ற வியாபாரிகளையும் கூட்டுறவுச் சங்கக் கடைகளையும் வாசஸ்தலத்துக்கு வந்து பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும்படி அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார். உத்தரவாதம் பெற்ற வியாபாரிகளையும் கூட்டுறவுச் சங்கக்கடையினரையும் வாசஸ்தலத்துக்கு வந்து பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கும்படி விதானைமார்களுக்கு உத்தரவிடும்படி காரியாதிகாரிகளுக்கு அரசாங்க அதிபர் உத்தரவிட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் கச்சேரியில் வாசஸ்தலத்தில் வந்து பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுக்களைப்பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கிராமத் தலைமைக்காரர் கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்கள், மற்றும் வியாபாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது என்று கூறும் துண்டுப் பிரசுரங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் வெளியிடப்பட்டுள்ளன. "தமிழ் மக்கள்" என்ற ஒரு இயக்கத்தால் இத்துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கச்சேரிக்கோ வாசஸ்தலத்துக்கோ சென்று பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டாமென்று இத்துண்டுப் பிரசுரங்களில் கேட்கப்பட்டுள்ளன. அரசாங்க அதிபரைச் சந்திக்கச் சென்றால் பொலிசாரும் இராணுவத்தினரும் சத்தியாக்கிரகிகளை நையாண்டி செய்வார்களென்றும் அத்துண்டுப் பிரசுரம் கூறியது. சத்தியாக்கிரகிகளை இரத்தம் சிந்தவைக்க வேண்டாம் என்று துண்டுப்பிரசுரம் கேட்டுள்ளது.

## அரிசிப்புத்தகம் பற்றிய உத்தரவு

### உணவு அமைச்சர் மறுப்பு

கொழும்பு, திங்கள்
நாடற்ற மக்களுக்கு அரிசிப் பங்கீட்டுப்புத்தகங்கள் வழங்க வேண்டாமென்று உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக வெளிவந்த சய்திகளை உணவு அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன மறுத்திருக்கிரு்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களுக்கு பங்கீட்டரிசிப் புத்தகங்கள் கிடைக்காமல் செய்வதற்காக, அரிசிப்புத்தகம் விநியோக சம்பந்தமாகக் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், நாடற்றவர்களுக்கு அரிசிப்புத்தகம் வழங்க வேண்டாமென உத்தரவிடப்படவில்லையென்றும் திரு. இலங்கரத்ன கூறினர்.

தோட்டங்களில் வாழும் நாடற்றவர்களுக்கு அரிசிப்புத்தகம் மறுக்கவேண்டிய பிரச்சினையே எழாதெனவும் தோட்டத்தில் வாழுகிறவர்களின் எண்ணிக்கை குறித்து தோட்ட சுப்பிரிண்டன்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகளின் மீதுதான் தோட்டத் தொழிலாளர்களுக்கு பங்கீட்டரிசி வழங்கப்படுகிறது என்றும் திரு. எஸ். தொண்டமான் எம். பி. கருத்து வெளியிட்டிருக்கிறார். தோட்டத் தொழிலாளருக்கு பங்கீட்டரிசிப் புத்தகங்கள் எப்பொழுதுமே வழங்கப்படுவது இல்லையென்றும் திரு. தொண்டமான் தெரிவித்தார்.

## பாகுபாடின்றி ஆதரவளிக்க கோரிக்கை

சுழிபுரம், திங்கள்
சத்தியாக்கிரக இயக்கம் வெற்றிபெறுவதற்கு தமிழ்ப்பேசும் மக்கள் கட்சி வேறுபாடின்றி ஆதரவழிக்கவேண்டுமென்று கூறும் தீர்மானம் ஒன்று சங்கானை தொட்டிலடி சன சமூகசேவா சங்கக்கூட்டத்தில்நிறைவேற்றப்பெற்றது.

சத்தியாக்கிரகிகளைப் பொலிசார் தாக்கியது குறித்துக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேறின.

## இந்திய விமானியின் தீரச்செயல்

புதுடில்லி, மார். 20
தாம்பரத்துக்கருகில் சமீபத்தில் இந்திய விமானப்படையைச் சேர்ந்த விமானம்ஒன்று விழுந்து நொறுங்கியது. அந்த விமானத்தை ஓட்டிச் சென்று மரணமான விமானி கணேஷ் என்பவரின் தீரத்தையும் புத்திசாதுரியத்தையும் பாரத பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ணமேனன் லோக் சபையில் வெகுவாகப் பாராட்டிப் பேசினர்.

விமானம் விபத்துக்குள்ளாகப் போகிறது என்றறிந்ததும் அது மக்கள் குடியிருக்கும் பிரதேசத்தில் விழாமல் வேறு திசைக்குத்திருப்பி ஓட்டினர் என்றும், விமானம் விழு முன் அதன் இரண்டாவது விமானியை பாரசூட் மூலம் கீழே இறக்கி தப்ப செய்தார் என்றும் கிருஷ்ணமேனன் விமானி கணேஷைப் பாராட்டினர். சபாநாயகர் கணேஷின் குடும்பத்தாருக்கும், உறவினருக்கும் அனுதாபம் தெரிவித்தார்.





ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிடெட்

116/118 கெய்சர் வீதி, : : கொழும்பு.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.